1987 மார்ச் 27]

என்பதை அவர்கள் கணக்கிடாமல் அரசுக்கு அனுப்பி விடுகிறார்கள். அரசு ஏற்றுக்கொண்டதற்குப் பின்னால் அதை முழுமையாக ஆய்வு செய்கிறார்கள். அப்படி ஆய்வு செய்கிறபோது ஒவ்வொரு கட்டத்திலும் அதற்குக் கால தாமதம் ஏற்படத்தான் செய்கிறது. அந்தக் காலம் அவசியமாக அவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டுமா என்று அந்த வல்லுநர் களை அழைத்து நான் கேட்டபோது சொன்னார்கள். அந்தக் காலம் கொடுக்கப்பட வேண்டும், இல்லை என்றால் திட்டமே கெட்டாலும் கெட்டுவிடும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதன் காரணத்தால் முதல்வரவர்கள் இப்போது அமைச்சரவைக் கூட்டத்தில் ஒரு உத்தரவையிட்டார்கள். இனிமேல் அரசாங்கத் தாப்பிலே அனுமதி கேட்டு வரக்கூடியவைகள் முழுமையாக ஆய்வு செய்யப்பட்டு, எவ்வளவு தேவை, அதனுடைய மொத்த மதிப்பு என்ன என்று அத்தனையும் இதில் வந்து விட வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அப்படி இனிமேல் ஆய்வுக்கு வந்து, அனுமதி கேட்டுவிட்டால், வேலையை உடனே துவக்குகின்ற ஒரு நிலையை ஏற்படுத்திவிட முடியும். எனவே மாற்று ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது.

வாகனங்களுக்கு சாலை வரி வசூலித்தல்.

205—(* வினா எண். 11560) திரு. செ. செம்மலை: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நிர்வாகச் சீர்திருத்தத்துறை பரிந்துரையின் அடிப்படையில் வாகனங்களை வாங்கும்போதே ஒரு தொகையை சாலை வரியாக வசூலிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். இதுபற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே. மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர்

அவர்கள் இந்த ஆண்டு அளித்துள்ள நிதிநிலை அறிக்கையில் வாகன வரி மாற்றத்தின் மூலம் கிடைக்கிற அவ்வளவு தொகையையும் சாலைகளின் பராமரிப்புக்காக ஒதுக்கப் படுவதாகத் தெரிவித்துள்ளார். எனவே எதிர்காலத்தில் இப்படி சாலை வரி, வாகன வரி மூலம் கிடைக்கின்ற தொகையில் ஒரு குறிப்பிட்ட சதவீதத் தொகையை ஆண்டுதோறும் சாலைகளின் பராமரிப்பிற்காக ஒதுக்குகின்ற முயற்சியை அரசாங்கம் மேற்கொள்ளுமா? அதற்காக நிதித் துறையினுடைய உதவியை அமைச்சரவர்கள் நாடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, நான்-டிரான்ஸ்போர்ட் வெஹிகிளைப் பொறுத்தவரையில், மொத்தமாக வரியை வசூலித்துவிடலாம் என்பது கோரிக்கை. அரசாங்கத்திற்குக் கொஞ்சம் வேலையைக் குறைக்கும். அந்தப் பணத்தை கட்டக் கூடிய வாகனம் வைத்திருப்பவர்களுக்கும் அந்தப் பணியைச் சுலபமாக்கும் என்ற காரணத்தால், இப்படிப்பட்ட முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. இப்போது நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் சாலைக்காக வசூலிக்கப் படுகின்ற கூடுதலான அத்தகைய தொகையில் சாலைகளின் பராமரிப்பிற்காகவும், சாலையைப் புதுப்பித்துக் கொடுப்பதற் காகவும் சொல்லியிருக்கிறார்கள். நிச்சயமாக அதன் மூலமாக ஒரு பெரிய மாற்றத்தை இப்போது இந்த நெடுஞ்சாலைத் துறையிலே ஏற்படுத்த முடியும் என்று நம்புகிறேன். ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை ஒதுக்குவதற்காக நிதியமைச்சர் அவர்களிடம் பேசியிருக்கிறோம் என்று சொல்லி யிருக்கிறார்கள். முழுவதுமே கொடுக்கவேண்டுமென்றும் எங்க ளுக்கு ஆசை தான். ஆனால் அதுவே முக்கியமான வருமானம் என்ற காரணத்தால் ஒரு குறிப்பிட்ட அளவிலே ஒதுக்கப்பட வேண்டுமென்று நிதித் துறையிலே கேட்பதற்கு இந்தத் துறைக்கு எந்தவிதத் தயக்கமும் இல்லை. நிதித்துறையைப் பொறுத்திருக் கிறது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, "வாகன வரியை வசூலிப்பதிலே இருக்கிற சிரமங்களைத் தவிர்ப்பதற்காக வாகன வரியைக் கூட ஒட்டுமொத்தமாக

1987 மார்ச் 27]

வசூலித்து விடலாம்" என்று அமைச்சரவர்கள் ஒரு நிகழ்ச்சியிலே பேசியிருப்பதாகப் பத்திரிகையிலே கண்டேன். அப்படி ஒட்டுமொத்தமாக வாகன வரியை வாகன ஓட்டிகளிடமிருந்து வசூலிப்பதும் ஒரு சுமையாக அமைந்து விடும். எனவே அந்தச் சுமையைக் குறைப்பதற்கு வாகனங்கள் வரி என்கிற வகையில், வாகனங்களில் பயன்படுத்துகின்ற டீசல், பெட்ரோல் இதுபோன்ற எரிபொருள்களின்மீது ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை, குறைந்த சதவீதத்தை வாகன வரியாகச் சேர்த்து வசூலிப்பதால், வாகன ஓட்டிகளுக்கும் சுமை இருக்காது, அதே சமயத்தில் அந்த வாகனங்களைப் பயன்படுத்துவோரிடமிருந்து நமக்கு வரி வந்து சேருமே, அந்த அளவிற்கு அந்த வகையில் வாகன வரியை மாற்றி அமைப்பதற்கு அமைச்சரவர்கள் தங்களுடைய பரிசீலனையோடு இந்த யோசனையையும் ஏற்றுக் கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இதிலே பலவிதமான சிக்கல்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. வரியை எங்கே வசூல் செய்தாலும் அந்த வரியை வசூல் செய்வதற்கு ஒரு பணியை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. எனவே அதன் காரணமாக இப்போது வண்டிகள் வாங்குகிறபோது அந்த வண்டிகளை வாங்கிக் கொண்டு வந்து ஆர்.டீ.ஓ. ஆபீசில் ரிஜிஸ்டர் செய்யும்போது ஒரு பணியை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. அரசு அதிகாரிகள் அதைச் செய்கிறார்கள். எனவே அப்படிச் சேர்த்து, ஒரு ஆண்டுக் காலம் அல்லது 6 மாத கால வரியை வாங்குகிறபோது, அதற்கு 10, 15 ஆண்டுக்கால வரியை வாங்கிவிட்டால் அதற்குப் பின்னால் அந்த வாகனத்திற்காக மீண்டும் வரி கட்ட வேண்டிய அவசியம் இருக்காது. அந்த வேலை நமக்கு மிச்சமாகிறது. எனவே ஒரு ஆண்டுக் காலத்திற்கு வரி வாங்கிய அந்த வேலையை, 15 ஆண்டுகளுக்குச் செய்து விடுகிறபோது, நிச்சயமாக இந்த பிரச்சினை ஏற்படாது. வாகனம் வாங்குகிறவர்களுக்கும், ரூ. 20,000 போட்டு ஒரு மோட்டார் சைக்கிள் வாங்குகிறபோது, அதற்காக ஒரு தொகையைக் கட்டுவது என்பது சிரமமாக இருக்காது. எனவே இரண்டு பக்கமும் சுலபமாக இருக்கும் என்ற காரணத்தினால் தான் இந்த நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது.